ஆவணம் ... யாழ்ப்பாணம்

விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 24 திங்கட்கிழமை (08.01.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 20




# போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலிலேயே உள்ளது!

## நினைவூட்டுகிறது கண்காணிப்புக்குழு

(கொழும்பு)

போர் நிறுத்த ஒப்பந்தம் இன்னமும் அமுலிலேயே இருக்கின்றது என்பதனை சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தாம் நினைவூட்டுவதாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துக்களுக்கு அமைய சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைத்து ஆயுத நடவடிக்கைகளையும் நிறுத்துமாறும் கண்காணிப்புக்குழு கோரியுள்ளது. அண்மைக்காலத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்புக்கள், தாக்குதல்கள் மற்றும் வன்செயல்களை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு கண்டித்துள்ளது. இது குறித்து அவ் அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் எதிர்காலம் மிகவும் இருண்டிருக்கின்றது

### புலித்தேவன் கவலை

(கிளிநொச்சி)

அரசாங்கம் போர் முரசம் கொட்டுகிறது. கெஹலிய ரம்புக்வெல,சரத்பொன்சேகாபோன்ற உயர் அரச அதிகாரிகள் பேச்சில் முழுமையான போர் குறித்த அறிகுறிகள் வெளிப்படுத்திக்கொண்டிருப்பதால் இலங்கையின் எதிர்காலம் மிகவும் இருண்டிருக்கிறது என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் சீவரத்தினம் புலித்தேவன் கூறியுள்ளார்.

மன்னார் இலுப்பைக்கடவையில் அண்மையில் 17 பேரின் (04 ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் வர்த்தக நிறுவனங்கள் மூலம் பொருட்கள் இன்று முதல் விநியோகம்


### யாழ்.அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சகல பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள சகல தனியார் கடைகள் மூலம் இன்று முதல் அரிசி, மா, சீனி, பருப்பு ஆகிய பொருட்கள் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

தனியார் கடைகளில் இப் பொருட்களை கொள்வனவு செய்யும் பொதுமக்கள் தமது குடும்ப பங்கீட்டு அட்டையை காண்பித்து கிராம சேவையாளர் பிரிவை உறுதிப்படுத்துவதுடன் குடும்ப (04 ஆம் பக்கம் பார்க்க)

## கவிஞர் வில்வரத்தினத்துக்கு நாட்டுப்பற்றாளர் கௌரவம்



(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பங்களிப்பை செய்த படைப்பாளர் கவிஞர் சு.வில்வரத்தினத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் நாட்டுப்பற்றாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.புங்குடுதீவில் பிறந்த இவர் சிறுவயதிலே அரசின் தமிழின அழிப்பு நடவடிக்கைகளின் வடுக்களை மனதில் சுமந்து அதனை எதிர்க்கும் மனோபவம் கொண்டவராக கவிதைகளுடாக தன் உள்

## இந்திய வெளிவிவகார அமைச்சர் ஒருநாள் விஜயமாக நாளை வருகிறார்

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஒரு நாள் விஜயமாகவே இலங்கை வரவுள்ளதாக இலங்கைக்கான மா மலித் தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் அவர் இலங்கை வருகைதரவுள்ளார். எதிர்வரும் ஏப்ரல் மாதம் இந்தியாவில்



நாட்டுப்பற்றாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.புங்குடுதீவில் பிறந்த இவர் சிறுவயதிலே அரசின் தமிழின அழிப்பு நடவடிக்கைகளின் வடுக்களை மனதில் சுமந்து அதனை எதிர்க்கும் மனோபவம் கொண்டவராக கவிதைகளூடாக தன் உள் மனக்கிடக்கைகளை வெளிக்கொண்டுவரத் தொடங்கியவர் சு.வில்வரத்தினம் என விடுதலைப்புலிகள் (04 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஒரு நாள் விஜயமாகவே இலங்கை வரவுள்ளதாக இலங்கைக்கான இந்திய தூதரகம் அறிவித்துள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சர் நாளை இங்கு வரவுள்ளதாக இந்திய தூதரகப் பேச்சாளர் நக்மா மலித் தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் அவர் இலங்கை வருகைதரவுள்ளார். எதிர்வரும் ஏப்ரல் மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ள சார்க் மாநாடு மற்றும் இலங்கையில் நிலவும் தற்போதைய சூழ்நிலை தொடர்பாகவும் (04 ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டுத் தாக்குதலில் ஐந்து பொலிஸார் படுகாயம்

(வவுனியா)

வவுனியாவில் இரு வேறு சம்பவங்களில் பொலிஸார் ஐவர் படுகாயமடைந்துள்ளனர். பண்டாரிக்குளத்தில் நேற்று முன்தினமிரவு 8 மணியளவில் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் நான்கு பொலிஸார் படுகாயமடைந்தனர்.

குருமன்காட்டில் நேற்று முன்தினம் மாலை 6.50 மணியளவில் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். (ச)

# வவு.வில் கிளைமோர்த் தாக்குதல் இரு இராணுவத்தினர் படுகாயம்

## கைக்குண்டு வெடித்து இளைஞன் பலி

(வவுனியா)

வவுனியா மகாரம்பைக் குளத்தில் அடையாளம் தெரியாத நபர்களினால் நேற்று மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதல் சம்பவத்தில் இரு இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர். இக் கிளைமோரை வெடிக்க வைத்த இளைஞர் அதிலிருந்து தப்பிக்க முயற்சித்த போது கையிலிருந்த கைக்குண்டு வெடித்து சம்பவ இடத்தில் பலியாகியுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலியாகிய இளைஞர் வவுனியா கொந்தகாரக்குளத்தைச் சேர்ந்த மனோகரன் மதனராஜா (வயது 23) என்று அவரது அடையாள அட்டை மூலம் (04 ஆம் பக்கம் பார்க்க)

## இரு இளைஞர்களின் சடலங்கள் வவு.வில் மீட்பு

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் நேற்று இரு இளைஞர்களின் சடலங்களை வவுனியா பொலிஸார் மீட்டுள்ளனர். இந்த இரு இளைஞர்களினதும் குரல்வளை நசுக்கிக் கொல்லப்பட்டிருப்பதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இரு சடலங்களும் அடையாளம் காண்பதற்காக வவுனியா வைத்தியசாலையில் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-5)

# இனப்பிரச்சினைக்கான தீர்வு ஆவணம் சர்வகட்சி மாநாட்டில் இன்று ஆராய்வு

(கொழும்பு)

இன நெருக்கடித் தீர்வைக் காண்பதற்காக நிபுணர் குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் சமர்ப்பித்த 'ஏ' அறிக்கை முழுமையாகக் கைவிடப்பட்டு நிபுணர் குழுவில் அங்கம் வகிப்பவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நான்கு வகையான அறிக்கைகளை உள்ளடக்கி அமைச்சர் திஸ்ஸ விதாரண தனிப்படத் தயாரித்த ஆவணமே இன்று நடைபெறவிருக்கும் சர்வகட்சிப் பிரதிநிதிகளின் மாநாட்டில் விரிவாக ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை இன்று நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டுப் பிரதிநிதிகளின் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.என்.சொக்சி மற்றும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் அக்கட்சியின் சார்பில் கலந்துகொண்டு இன நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பதற்கான மற்றொரு ஆலோசனைத் திட்டத்தை முன்வைக்கவுள்ளதாகவும் செய் (04 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கப்பல் சேவை

யாழ்-திருமலை கப்பல் சேவை இன்று இடம் பெறவுள்ளது. கடந்த 6 ஆம் திகதி காங்கேசன்துறை துறைமுகத்துக்குச் சென்று திரும்பிய பயணிகளை ஏற்றிக்கொண்டு அக் கப்பல் இன்று புறப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அன்றைய தினம் பயணச் சீட்டுக்களைப் பெற்ற பயணிகளை இன்று காலை 7 மணிக்கு யாழ்.சிங்கள மகா வித்தியாலயத்தில் ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளனர். கடந்த 6 ஆம் திகதி 300 பயணிகளுடன் புறப்படத் தயாரான கப்பல் அசம்பாவித சம்பவங்கள் காரணமாக புறப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

## சிவத்தமிழ்ச் செல்வியின் தலைமையில் நடைபெற்ற அறக்கொடை விழா




(யாழ்ப்பாணம்)

சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டியின் 82-வது பிறந்த நாள் அறக்கொடைவிழா நிகழ்வுகள் நேற்றுக் காலை 9.45 மணியளவில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான யாத்திரிகர் மண்டபத்தில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் இடம்பெற்றது.

ஆசியுரையை நல்லையாதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகளும் மற்றும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய பிரதம குரு ஸ்ரீலஸ்ரீ ச.அகிலேஸ் வரக் குருக்களும் வழங்கினார்கள். வரவேற்புரையை உபதலைவர் க.அருளானந்தசிவமும் அறிமுக உரையை செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனும் நிகழ்த்தினார்.

நிகழ்வில் முதியோர்களான கட்டுவன் இராமச்சந்திரன் முன்னை நாள் திருமகள் அச்சக புத்தகம் கட்டுநர், கீரிமலை சங்கீத பூஷணம் செல்வி கதிர்காமர் நாகம்மா ,அளவெட்டி பண்டிதர் க.நாகலிங்கம், தெல்லிப்பழை ஓய்வு பெற்ற ஆசிரியர் தி.சுந்தரமூர்த்தி ஆகியோர் கௌரவிக்கப்பட்டார்கள்.

சிறப்புரைகளை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர்களான க.சிவலிங்கராஜா மற்றும் அ.சண்முகதாஸ் ஆகியோர் நிகழ்த்தினார்கள். (ச-5)

## ஜோசப் எம்.பியின் கொலை விசாரணை ஜனாதிபதி ஆணைக்குழு மட்டு.விஜயம்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை தொடர்பாக விசாரணை செயவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைகுழு மட்டக்களப்புக்குச் சென்று விசாரணைகளை நடாத்தவுள்ளது.

மட்டக்களப்பிலுள்ள சில சாட்சிகள் இந்த விசாரணையின் போது சாட்சியமளிப்பதற்காகக் கொழும்புக்கு வரத் தயங்குவதன் காரணமாகவே ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அவர்களிடமிருந்து சாட்சியம் பெறுவதற்காக மட்டக்களப்பு செல்ல இருக்கின்றார்கள்.

ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி மகாநாம திலகரட்ண இதனைத் தெரிவித்துள்ளார்.ஏற்கனவே ஆணைக்குழு பலரிடமிருந்து வாக்கு மூலத்தைப் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-3)

## பாடசாலை உபகரணங்கள் விமானத்தில் எடுத்துவரப்பட்டன

யாழ்.மாணவர்களுக்கு பாடசாலைகள் ஊடாக வழங்குவதற்கு விமானம் மூலம் எடுத்துவரப்பட்ட பேனா, பென்சில் மற்றும் அப்பியாசக் கொப்பிகள் யாழ்.கல்வித் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

இப் பாடசாலை உபகரணங்களில் 75 ஆயிரம் பென்சில்கள்,75 ஆயிரம் பேனாக்கள் மற்றும் 90 ஆயிரம் 80 பக்கமுடைய அப்பியாசக் கொப்பிகள் அடங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

இவ் உபகரணங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பாடசாலை அதிபர்கள் ஊடாக மாணவர்களுக்கு பகிர்ந்தளிப்பார்கள் எனத் தெரிவித்த அரச அதிபர், மேலும் ஒரு தொகுதி பாடசாலை உபகரணங்கள் கப்பல் மூலம் எடுத்துவரப்படுவதாகவும் கூறினார். (ச-5)

## தீட்டல்பச்சை அரிசி நாளை முதல் விநியோகம்

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக நாளை முதல் தீட்டல்பச்சை அரிசி மற்றும் சக்கரை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

தற்போதுள்ள இருப்பின் அடிப்படையில் குடும்பம் ஒன்றுக்கு ஒரு கிலோ பச்சை அரிசியும் ஒரு கிலோ சக்கரையும் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.(ச-5)

## வடக்குக் கிழக்கு எம்.பிக்களுக்கு பாதுகாப்பு அதிகரிக்கத் திட்டம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை அதிகரிக்க அமைச்சுக்களின் பாதுகாப்புப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சினால் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதம்மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கு நிலைமைகளை கருத்தில் கொண்டு ஒவ்வொரு எம்.பிக்கும் ஒரு சப்இன்ஸ்பெக்டர் உட்பட ஐந்து பொலிஸார் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

அவர்கள் தமது சம்மதக் கடிதத்தை அனுப்பி வைக்குமாறும் அக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சின் கடிதம் தொடர்பாக கூட்டமைப்பினர் கூடி முடிவெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.(ச-5)

## இலங்கை அரசுக்கெதிராக ஐ.நா.பேரவையில் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை அரசுக்கு எதிராக தீர்மானம் ஒன்று ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையால் இம்மாதம் எதிர்வரும் 15 ஆம் திகதி நிறைவேற்றப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில் இலங்கைக்குப் பயணம் செய்த ஐ.நா.சிறப்புத் தூதுவர் அலன் றொக் முன்வைத்த கருத்துக்கள் அடிப்படையில் இத் தீர்மானம் நிறைவேற்ற தயாராகி வருவதாக அறியமுடிகின்றது.

துணைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பலவந்த சிறுவர் ஆட்சேர்ப்புக்கு இராணுவம் ஒத்துழைப்பு வழங்கி வருவதாக அலன் றொக் குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேண்டும் எனவும் இதனை ஆராய அதிபர் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் வலியுறுத்தும் எனக் கூறப்படுகின்றது. (ச-5)

## தென்மராட்சியில் ஊரடங்கு அமுல்

தென்மராட்சியின் கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் நேற்று மாலை 6 மணிமுதல் காலவரையறையற்ற பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டமைக்கான காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ச-5)

## சாரதி மது அருந்தினால் கார் ஓடாது டொயோட்டா காரில் புதிய வசதி

(டோக்கியோ)

காரை ஓட்டுபவர் மது போதையிலிருந்தால் பக்கத்தில் உட்கார்ந்து இருப்பவர்களுக்கு வேண்டுமானால் தெரியும். ஆனால் காருக்குத் தெரியுமா? என்ன இப்படி ஒரு கேள்வி என்கிறீர்களா? உண்மைதான்.

காருக்கும் தெரியும். அப்படித் தெரிந்தால் சும்மா இருக்காது. அது உடனே தானாகவே நின்று விடுமாம். இப்படிப்பட்ட நவீன தொழில்நுட்ப வசதியுடன் காரை தயாரிக்கவுள்ளது யப்பானின் முன்னணி கார் நிறுவனமான டொயோட்டா.

தான் தயாரிக்கும் கார்களில் இந்தத் தொழில் நுட்பத்தை புகுத்தவுள்ளது. இந்த நிறுவனம் 2009 ஆம் ஆண்டு முதல் இந்த நிறுவனம் தயாரிக்கும் கார்களில் தண்ணீ வண்டியை தட்டிக் கேட்கும் சாதனம் பொருத்தப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழில் நுட்ப முறையுள்ள காரை மதுபோதையிலிருக்கும் ஒருவர் ஓட முயன்றால் கார் கிளம்பாது. இதை எப்படி இந்த தொழில்நுட்பம் கண்டுபிடிக்கிறது தெரியுமா?

மதுபானம் அருந்திய சாரதியின் மது வாடை மூலம் உணரும் என்று நினைக்க வேண்டாம். சாரதியின் கண்கள் அவர் மது குடித்திருப்பதை காட்டிக் கொடுத்துவிடும்.

அதுபோல அவரின் நுண்ணிய அசைவுகள் ஸ்ரேரிங்கை பிடித்து ஓட்டும் முறை எல்லாம் காட்டிக் கொடுத்துவிடும்.

அதை இந்த தொழில் நுட்பம் துல்லியமாகக் கண்காணித்து கண்டுபிடித்துவிடும். பின்னர் தானாகவே கார் இயக்கத்தை நிறுத்தி விடும். அத்தகைய வசதியுடன் கார் தயாரிக்கப்படுகிறதாம். யப்பானில் மட்டும் கடந்த 2005 ஆம் ஆண்டில் 14 ஆயிரம் பேர் மதுகுடித்து காரை ஓட்டியுள்ளனர். அதில் 707 பேர் இறந்தும் உள்ளனர்.

இதையடுத்துத்தான் டொயோட்டா நிறுவனம் இந்தத் தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்துள்ளது. இதை இப்போது சோதனை அளவில்தான் பயன்படுத்தி வருகின்றது. (ச-5)

# 2007 புத்தாண்டு பலன்கள்



## சிங்கம்

(மகம், பூரம், உத்தரம் 1)

*எதிர்நீச்சல் போட்டாவது வெற்றிகளை எட்டிப் பிடிக்கும் குணமுடைய சிங்க ராசி நேயர்களே!*

இந்த ஆண்டு தொடக்கத்தில் ராசி அதிபன் சூரிய பகவான், ஆத்மகாரனாகி, பஞ்சம திரிகோணத்தில் அமர்ந்திருப்பது உங்களின் சாதனைகளை வெளியுலகிற்குப் பறைசாற்ற உதவுகிற அம்சமாகும். சோதனைகள், சறுக்கல்கள், எதிர்ப்புகள், ஏமாற்றங்கள் போன்றவை இந்த ஆண்டு இல்லை என்றே கூறலாம். சுகஸ்தானத்தில் அமர்ந்த குரு பகவானின் பார்வை அஷ்டம ஸ்தானத்திற்கும், கர்ம ஸ்தானத்திற்கும், விரயஸ்தானத்திற்கும் கிடைக்கிறது. விரயஸ்தானத்தில் அமர்ந்துள்ள சனி பகவானின் மீது விழும் பார்வை யினால் பிரச்சினைகள் நீங்கி, உங்களின் அமைதியான உறக்கத்தைத் திரும்பப் பெறுவீர்கள். வீண் செலவுகளும் கட்டுப்படும். தொழிலில் அபிவிருத்தி மாற்றங்கள் உண்டாகும். சிலருக்கு தூர தேசம் சென்றுவரும் யோகமும் கிடைக்கும்.

ராசியில் உலவும் கேது பகவானும், சப்தமத்தில் அமர்ந்த ராகு பகவானும் உங்கள் மனதில் எழும் சந்தேகங்களை நீக்குவார்கள்.

இதுவரை ஒத்திப் போட்ட விவகாரங்களில் புதிய அக்கறையுடன் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். நண்பர்கள் உங்களின் துணிச்சலைக் கண்டு ஆச்சரியப் படுவார்கள். மறைமுக நெருக்கடிகள் அகலும். சகோதர, சகோதரிகளுடனான உறவு சீர்படும். பொதுவாக இந்தப் புத்தாண்டில் உங்களுக்கு மகிழ்ச்சி நிறையும்.

உறவினர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். அதே நேரம் சிக்கனத் தைக் கடைப்பிடிப்பது நலம் பயக்கும். மற்றபடி எந்தச் செயலையும் வெற்றிகரமாகச் செய்து முடித்து விடுவீர்கள். இருப்பினும் அனாவசியப் பயணங்கள் வேண்டாம்.

உத்தியோகத்தர்களுக்கு அலைச்சலும், வேலைப் பளுவும் அதிகரித்தாலும், நீங்கள் செய்து முடித்த வேலைகள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறும். உங்கள் ஆற்றல் அதிகரிக்கும். அலுவலக ரீதியான பயணங்களர் பணவரவு உண்டாகும். ஆனாலும் சக ஊழியர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்க வேண்டாம். சிலருக்கு இந்த ஆண்டு விரும்பத்தகாத இடமாற்றங்களும் உண்டாகும்.

இந்த ராசி வியாபாரிகள் கொடுக்கல், வாங்கல் விஷயங்களில் அனுகூலமான பயன்களைக் காண்பார் கள். தொழில் ரீதியாக புதிய திருப்பங்கள் ஏற்படும். மற்ற படி புதிய சந்தைகளை நாடிச் செல்லும் நேரத்தில் அதீத கவனத்துடன் செயல்பட்டு காரியமாற்றவும், கூட்டுத் தொழில் புரிவோர் சற்று கூடுதல் உஷாராக இருப்பது நல்லது.

விவசாயிகளுக்குக் கொள்முதல் அதிகமாக இருந் தாலும் இலாபம் குறைவாகவே இருக்கும். அதனால் மேலதிக வருமானத்தைப் பெருக்க காய்கறிகள், கிழங் குகள் போன்றவற்றை ஊடு பயிராக விளைவித்துப் பயன்பெறவும், சந்தையில் போட்டிக்குத் தகுந்தவாறு விலை நிர்ணயம் செய்து விற்றால் நஷ்டங்களைத் தவிர்க்கலாம்.

அரசியல்வாதிகளின் அந்தஸ்தில் சிறிது குறைபாடு கள் உண்டாகும். ஆகவே கவனமுடன் செயல்படவும். தொண்டர்களின் பாராமுகத்தால் கோபமுறாமல், கடமை களைச் செய்து வரவும். பேச்சில் கண்ணியம் குறை யாது பார்த்துக் கொள்ளவும்.

கலைத்துறையினர் இந்த ஆண்டு புதிய ஒப்பந் தங்களைச் செய்வார்கள். அதேசமயம் எதிர்பார்த்த புகழும், பாராட்டும் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

எனவே பொறுமையுடன் செயல்பட்டால் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். போகப் போக நிலைமைகளும் மாறி விடும்.

பெண்மணிகளுக்கு இது மகிழ்ச்சிகரமான ஆண்டு. புத்தாடை, அணிகலன்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவரிடம் எதிர்பார்த்த ஆதரவைப் பெறுவீர்கள். பணவரவுக்கும் எந்தக் குறையும் வராது.

மாணவமணிகள் முனைப்புடன் செயல்பட்டு மதிப் பெண்களைப் பெறுவார்கள். உங்களின் முயற்சிகளுக்கு ஆசிரியரிடம் நல்ல பாராட்டு கிடைக்கும். மற்றபடி திட்டமிட்ட வேலைகளில் பதற்றப் படாமல் ஈடுபட்டால் வெற்றி நிச்சயம்.

*பரிகாரம்:*-துர்க்கையம்மனை வழிபட்டு வரவும். நேரம் கிடைக்கும் போதெல்லாம் "ஜயஜய துர்க்கா" என்று சொல்லி வரவும்.

பிறர் மனம் வருந்தச் செயல்புரியாதீர்கள்! உங்கள் உரிமையை விட்டுவிடாதீர்கள்! பிறர்உரிமையில் தலையிடாதீர்கள்!

–சுவாமி இராமதாசர்

வலம்புரி

# தென்னிலங்கை குண்டு வெடிப்புக்கள் தடுக்கும் பொறுப்பு யாரிடம்?

தென்னிலங்கையில் கடந்த இரு தினங்களில் இரு வேறு இடங்களில் குண்டுகள் வெடித்துள்ளன. இதனால் சுமார் இருபதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

அதேநேரம் வடபகுதியில் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான யுத்த விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் சுமார் பதினைந்து பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

ஒட்டு மொத்தத்தில் கடந்த ஒரு சில தினங்களில் மட்டும் சுமார் முப்பத்தைந்து பேர் குண்டுத் தாக்குதல்களில் பலியாகியுள்ளனர்.

இவ்விதம் பலியாகிப்போன பொதுமக்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்கவேண்டிய பொறுப்பு யாருடையது?

நாட்டில் குண்டுவெடிப்புக்கள் இடம்பெறுவதை முடிவுக்குக் கொண்டுவரும் பணியைச் செய்ய வேண்டியது யார்? என்ற கேள்விகள் இச் சந்தர்ப்பத்தில் எழுவது நியாயமானதே.

இதன் பிரகாரம் நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் ஒட்டுமொத்த மக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்யும் பொறுப்பு அந்த நாட்டின் அரசிடமே உண்டு.

அவ்வாறாயின் அரசாங்கம் அதனைச் செய்கின்றதா? அவ்வாறு செய்யாவிடில் அதற்கான பதில் நடவடிக்கை என்ன? என்ற சிந்தனை அரசாங்கத்தை தெரிவு செய்த மக்களிடையே ஏற்பட வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரை அரசாங்கத்தைத் தெரிவு செய்யும் பொறுப்பான்மை சிறுபான்மையினமாக இருக்கக் கூடிய தமிழ்-முஸ்லிம் மக்களிடையே இல்லை என்பது நிதர்சனம் ஆனது.

எனவே பெரும்பான்மையினமாக இருக்கக் கூடிய சிங்கள மக்களே அரசாங்கத்தை தட்டிக் கேட்கும் பொறுப்பை கொண்டுள்ளனர்.

இங்கு சிங்கள மக்களின் பொறுப்பென்பதில் ஓர் சமத்துவமும், நடுநிலைத்தன்மையும் இருக்க வேண்டும்.

அதாவது தமிழர் பகுதிகளில் படையினர் விமானக் குண்டுத் தாக்குதல்களை நடத்தி அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றழிக்கும் போது அதற்கு நியாயம் கேட்பதும் சிங்கள மக்களின் கடமைஎன்பது மறுக்கமுடியாத உண்மை.

அதேநேரம் தென்னிலங்கையில் இடம்பெறும் குண்டு வெடிப்புக்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவதும் அவசியமானதே.

சிறுபான்மையினம் என்பதற்காக அதனை நசுக்கும் போது பாராமுகமாக இருந்தால் நாடு முழுமையும் அபாயகரமான சூழ்நிலைக்கு ஆளாவது தவிர்க்க முடியாததே.

இந்நிலைமையே இலங்கை தற்போது அனுபவித்து வருகின்றது. இதற்கெல்லாம் முடிவு கட்டுவதாகவிருந்தால் இலங்கைப் பிரஜைகள் ஒவ்வொருவரும் சம உரிமையும், பூரண சுதந்திரமும் உடையவர்களாக வாழ்வதற்கான வகைமை செய்யப்பட வேண்டும்.

இதனைச் செய்யும் பொறுப்பு இலங்கை அரசிடமே உண்டு. இதற்குத் தென்னிலங்கை மக்களின் மனப்பூர்வமான அழுத்தம் அரசுக்குத் தேவையாக இருக்கின்றது.

வட பகுதியில் குண்டுவீசி விட்டு தென்னிலங்கையை அமைதிப் பிரதேசமாக நினைப்பது அறியாமையின் வெளிப்பாடேயன்றி வேறு எதுவும் இல்லை.

# இந்தியப் படையின் பிரவேசம் இவ்வருடம் நிகழும் சாத்தியம்

## சிங்கள நாளேட்டின் ஆசிரியர் தலையங்கம் ஆரூடம்

(கொழும்பு)

1987 ஆம் ஆண்டு மறக்க முடியாத ஒன்றாகும். சுதந்திரமடைந்த பின்னர் எமது நாடு வேறு எந்த ஒரு நாட்டிலும் அவ்வாறு கீழான சிறுமைப்படுத்தலுக்கு உள்ளாகாத அளவுக்கு அந்த ஆண்டில் நாட்டின் மதிப்பு கீழ் தள்ளப்பட்டது.

அந்த துரதிஷ்டமான நிகழ்வு ஏற்படுவதற்கு பெருமளவில் காரணமாக நமது தவறான செயற்பாடுகளேயிருந்தன. அன்று ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கமும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி உட்பட ஏனைய தென்பகுதிக் கட்சிகளும் தமது அரசியல் நடவடிக்கைகளை மிகுந்த தொலைநோக்குடனும் ஒற்றுமையுடனும் நடுநிலையுடனும் மேற்கொண்டிருந்தால் 1987 ஆம் ஆண்டில் நாம் அந்த அளவுக்கு ஆபத்தான அபத்தமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்க மாட்டோம்.

புதிய வருடத்தில் காலடி வைத்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தக் கசப்பான கடந்த காலத்தின் பக்கம் ஒருமுறை திரும்பிப் பார்க்க வேண்டியுள்ளது. இதற்குக் காரணம் 2007 ஆம் ஆண்டு மற்றுமொரு 1987 ஆம் ஆண்டாக உருவாக்கப்படுவதற்கு சாதகமான ஒரு அரசியல் சூழ்நிலை தற்போதும் நிலவுவதே இந்த இலங்கை நாட்டில் இன்னும் தீர்வு காண முடியாத துர்லாபமான விவகாரமாக இருப்பது இனப்பிரச்சினையே.

இதன் காரணமாக நிறுத்தப்பட முடியாத யுத்தம் நிகழ்ந்து கொண்டிருப்பது மட்டுமல்ல தமது உள்நாட்டு விவகாரங்களில் மத்தியஸ்தம் என்ற முறையில் இந்தியா உட்பட ஏனைய வெளிநாடுகள் தலையிடுவதற்கான சந்தர்ப்பங்களும் உருவாகியுள்ளன.

இந்த இனப்பிரச்சினை இல்லாவிட்டால் எமது நாட்டில் வெளிநாட்டுத் தலையீடுகள் ஏற்படுவதற்கான சாத்தியப் பாடுகள் மிகக் குறைவே என சிங்கள நாளேடு ஒன்றின் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எவ்வாறாயினும் இனப்பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாத நிலையில் அதற்கு எந்த வகையிலேனும் முழுமையான தீர்வு காணப்படும் வரையில் வெளிநாடுகளின் தலையீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவது முடியாததாகவே இருக்கும்.

1991 ஏப்ரல் 19 ஆம் திகதி ஜனாதிபதி ரணசிங்க பிறேமதாஸ பாராளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்து வைக்கும்போது வெளிநாட்டு இராணுவம் வடக்குக் கிழக்கிற்கு வந்ததற்குக் காரணம் நமது ஒற்றுமையின்மையே என்று கூறியிருந்தார்.

மேற்குறிப்பிட்டவாறு 2007 மற்றுமொரு 1987 ஆக உருவாவதை இப்பொழுது கூட நம்மால் தவிர்த்துக் கொள்ள முடியும். அவ்வாறே சர்வதேச சமூகம் இலங்கைக்கு எதிராக குற்றம்சுமத்துவதையோ அல்லது இந்தத் தீவை ஒரு சைபிரஸ் ஆக மாற்ற முயல்வதையே தடுத்துக் கொள்வதற்கு இன்னும் எமக்கு அவகாசம் உண்டு.

இதற்கு நாம் செய்ய வேண்டியது யாதெனில்; புலிகள் அமைப்புக்கு எதிரான யுத்தத்தை மேற்கொள்ளும் அதே வேளை ; தமிழ் மக்களுக்காக ஜனநாயக ரீதியிலான அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளும் அடிப்படையில் அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதற்காக மேலும் தாமதமின்றி நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.


இவ்வாறு அரசாங்கம் எடுக்கும் தீர்வு முறை ஒன்றை புலிகள் இயக்கத்தினர் ஏற்றுக் கொள்ளாது நிராகரிப்பார்கள் என்பதையும் நிச்சயமாகக் கூறலாம். இவ்வாறு தீர்வு முயற்சிகளை புலிகள் அமைப்பு நிராகரிக்கும் போது தற்போது எம்மீது இருக்கும் சர்வதேசத்தின் அழுத்தம் விலகி அது புலிகள் அமைப்பின் மீதே ஏற்படும்.

இலங்கையின் ஒற்றுமைக்கும் ஜனநாயகத்திற்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருப்பது வடக்கில் உருவாகியிருக்கும் தீவிரவாதம் மட்டுமல்ல. இவ்வாறே தெற்கில் தோன்றியுள்ள தீவிரவாதமும் நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்பிற்கும் நலன்களுக்கும் விரோதமாக எழுந்துள்ளது.

ஜனாதிபதி தெற்கிலுள்ள தீவிரவாதிகளின் தாளத்திற்கு ஏற்றபடி தொடர்ந்தும் நடனம் ஆடுவாராயின், வடக்கில் தீவிரவாதத்திற்கு எதிரான கொள்கையை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை உருவாகிவிடும். (ச–5)

# அனைத்து மக்களையும் சமனாக கருதும் அரசாங்கம் ஒன்றே நாட்டிற்குத் தேவை

## ஜே.வி.பி.தலைவர் கோரிக்கை



அனைத்து மக்களையும் சமனாக நடாத்தும் அரசு ஒன்று இருந்தால் நாட்டில் பிரச்சினை இருக்காது என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தறை திக்குவெலப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வரும் மக்களைப் பாதுகாக்க வேண்டும் எனவும் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் சென்று மாணவர்களுக்கு கல்வியைப் பெற வசதிகளை ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளை முழுமையாகத் தோற்கடிப்போம் என பகிரங்கமாக அறிவித்து அதற்கான நடவடிக்கைகளில் இறங்குமாறு ஜே.வி.பி.அரசாங்கத் திடம் கோரிக்கை விடுத்துள்ளது. விடுதலைப்புலிகள் உடனடியாகத் தடை செய்யப்பட வேண்டும் என ஜே.வி.பியின் அரசியல் சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–3)

# இந்திய நிறுவனத்துடனான ஒப்பந்தம் இரத்தானது

(கொழும்பு)

திருகோணமலையில் வீதி அமைப்பதற்காக இந்திய நிறுவனம் ஒன்றுடன் செய்து கொள்ளப்படவிருந்த ஒப்பந்தம் சர்ச்சை காரணமாகக் கைவிடப்பட்டுள்ளது.

திருகோணமலையில் வீதி புனரமைப்பிற்காக இந்திய நிறுவனம் ஒரு கிலோ மீற்றருக்கு 300 மில்லியன் ரூபாவை கோரியிருந்தது. அந்த உடன்படிக்கைக்கான அங்கீகாரம் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் அமைச்சரவை வழங்கியது.

எனினும் இது தொடர்பாக கற்கை நெறி நடத்திய அதிகாரிகள் குழு வீதி அமைப்பிற்கு ஒரு கிலோ மீற்றருக்கு 62 மில்லியன் ரூபாவே செவாகும் எனக் கணக்கிட்டது. இதையடுத்துச் சர்ச்சை கிளம்பியது.

இது தொடர்பாக வர்த்தக மற்றும் நுகர்வோர் அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே கருத்துத் தெரிவிக்கையில்; இந்தளவு பெரும் தொகையை செலவழித்து வீதிப் புனரைப்புச் செய்யும் நிலையில் அரசு இல்லை. அதனால் ஒப்பந்தத்தை அமைச்சரவையிலிருந்து பின்வாங்கியுள்ளேன் என்று தெரிவித்தார். (ச–5)

# மாணவர்களுக்கு சவர்க்காரம்

(யாழ்ப்பாணம்)

சகல பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்களிலும் கையிருப்பிலுள்ள சவர்க்கார வகைகளை பிரதேச செயலர் ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்குமாறு யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

அவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் சவர்க்காரங்கள் பாடசாலை அதிபர்களூடாக மாணவர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது. இதேவேளை மேலும் ஒருதொகுதி கப்பலில் எடுத்து வரப்படுவதாகத் தெரிவித்த அரச அதிபர், அவற்றையும் மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கூறினார். (ச–5)

# படுகாயமடைந்த பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்திற்கு அண்மையாக கச்சேரி-நல்லூர் வீதியில் நேற்று முன்தினம் காலை 8.45 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் படுகாயமடைந்த பெண் அன்று மாலை 5 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சுண்டுக்குளி சோமசுந்தரம் வீதியைச் சேர்ந்த பொன்னுத்துரை பிலோமினா (வயது-54) என்ற பெண்ணே சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தவராவார்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச–5)

# வடக்கு-கிழக்கு இணைப்புக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கும்

## தமிழ்க் கூட்டமைப்பு நம்பிக்கை

(கொழும்பு)

1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை -இந்திய உடன்படிக்கைக்கு அமைய வடக்கு -கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்தும் இணைக்கப்பட்டிருப்பதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டுமென இந்தியா கேட்டுக்கொண்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்திருக்கின்றார்.

அண்மையில் புதுடில்லி சென்று இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழுவில் இடம் பெற்றிருந்த மாவை சேனாதிராசா இதற்கான உறுதிமொழி தமக்கு இந்தியப் பிரதமரால் வழங்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி கொழும்பு வரும்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இந்தியாவின் இந்த நிலைப்பாடு தெரியப்படுத்தப்படும். கொழும்பு வரும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்காவையும், வெளிவிவகாரத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவையும் கொழும்பில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் சந்திப்பார் என இந்தியத் தூதரகத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதியுடனும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடனும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பது என்ற விவகாரமே முக்கியமாக எழுப்பப்பட்டதாக மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன என்ற அடிப்படையிலேயே தற்போதைய சமாதான முயற்சிகள் ஆரம்பின என்று தம்முடைய இந்தியப் பயணத்தின் போது விளக்கிக் கூறியதாக தெரிவித்த மாவை எம்.பி.இந்த இணைப்பை பிரிப்பது சமாதான முயற்சிகளுக்கு ஒரு பின்னடைவாக அமையுமெனவும் சுட்டிக்காட்டினார். (ச-5)


திருமறைக் கலாமன்றம்
கலைத்தூது அழகியல் கல்லூரி
KALAITHUTHU COLLEGE OF AESTHETICS
மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்

திருமறைக் கலாமன்றத்தினால் நடத்தப்படுகின்ற 'கலைத்தூது அழகியல் கல்லூரி'யில் 2007 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவில் பயில்வதற்கு பின்வரும் பாடநெறிகளுக்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பாடவிதானங்கள்

❖ வாய்ப்பாட்டு ❖ நடனம் (பரதம்) ❖ நடனம் (கதகளி)
❖ வீணை ❖ வயலின் ❖ கிற்றார் ❖ ஓர்கன் (கீ போட்)
❖ புல்லாங்குழல் ❖ மிருதங்கம் ❖ சித்திரம்

க.பொ.த (சா.த) - (உ.த)

- நாடகமும் அரங்கியலும்
- வாய்ப்பாட்டு
- நடனம்
- சித்திரம்

குறிப்புகள்

- ஒவ்வொரு பாடவிதானங்களுக்கும் குறிப்பிட்ட கலைத்திட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டு தரங்களின் அடிப்படையில் பயிற்சிகள் நடத்தப்படும்.
- அறிமுறை,செய்முறை இரு வகையிலும் வகுப்புக்கள் நடத்தப்படும்.
- வட இலங்கை சங்கீத சபை, க.பொ.த.பரீட்சைகள் போன்றவற்றிற்குத் தோற்றுவோருக்கு செயல்முறை பயிற்சிகள் பூரணமாக வழங்கப்படும்.
- அனைத்துப் பாடங்களுக்குமான விண்ணப்ப முடிவுத் திகதி 20.01.2007 சனிக்கிழமை ஆகும்
- விண்ணப்பப்படிவங்களை கலைத்தூது அழகியல் கல்லூரியிலும், யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

அதிபர்.
128,டேவிற் வீதி,யாழ்ப்பாணம். கலைத்தூது அழகியல் கல்லூரி,
தொலைபேசி :- 021 222 9419 திருமறைக் கலாமன்றம்.



யாழ்ப்பாணம் மாவட்ட
வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் (வ.து)
வெதுப்பக உற்பத்தியாளருக்கான அறிவித்தல்

10.01.2007 புதன்கிழமை முதல் ரீ பணிஸ் உற்பத்தி செய்ய அனுமதிக்கப்படுகின்றீர்கள். ஒரு சோடி ரீ பணிஸ் 150g நிறை (கொண்டதன்) விலை 15/=

| | |
|---|---|
| 150g நிறை கொண்ட சோடி பணிஸின் விலை 15/= | |
| ஒரு தனி பணிஸின் விலை | 7.50 |
| 100g பேபி றஸ்க் | 20/= |
| ஒரு வட்ட றஸ்க் (தனி) | 2/= |
| ஒரு மடத்தல் (தனி) | 2.50 |

மேற் கண்ட விலையில் நுகர்வோருக்கு விற்பனை செய்ய வேண்டும் என்பதை விற்பனையாளருக்கு அறிவுறுத்தப்படுகின்றது. இதிலும் பார்க்க கூடிய விலையில் விற்பனை செய்யும் விற்பனையாளர் மீது சட்ட நவடிக்கையும் பொருள் பறி முதலும் செய்யப்படும்.

மேற் கூறப்பட்ட பொருட்களை மட்டுமே வெதுப்பகங்கள் உற்பத்தி செய்யவேண்டும். மீறி வேறு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவது உறுதிப்படுத்தப்பட்டால் மா விநியோகம் மீளாய்வு செய்யப்படும்.

இல. 64, 3-ம் குறுக்குத்தெரு, நிர்வாகம்.
யாழ்ப்பாணம். யாழ்.மா.வெ.உ.கூ.ச. (வ-து)


## கொழும்பு பஸ்களில் நேற்று முதல் பொதிகள் கொண்டு செல்ல தடை

பயணிகள் பஸ்கள் சோதனை செய்யப்பட்ட பின்னரே சேவையில் ஈடுபடுத்தப்படும் என போக்குவரத்துத்துறை அமைச்சர் எச். எம்.பௌசி தெரிவித்துள்ளார்.கொழும்பில் தொடர்ந்து இடம் பெற்ற பஸ் குண்டு வெடிப்பினையடுத்து நேற்று பாதுகாப்புத்தரப்பினருடன் அமைச்சர் பௌசி கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டுள்ளார்.இக் கூட்டத்தில் பொலிஸ்மா அதிபர் இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் போக்குவரத்துத்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பஸ் பயணத்தின் போது குண்டுகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டால் உடணடியாக பயணிகள் அனைவரையும் பஸ்ஸில் இருந்து இறக்குமாறும் அவர் கேட்டுள்ளார். இதேவேளை பஸ்களில் பொதிகள் கொண்டு செல்வதை சில நாட்களுக்கு தடுக்கு.மாறும் பௌசி கேட்டுள்ளார். (ச)

### வவு.வில் கிளைமோர்...

அடையாளம் காணப்பட்டுள்ளார்.காயமடைந்த இராணு வத்தினர் வவு னியா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுரா தபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளார்.பலியாகிய இளைஞரின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் பொலிஸாரால் ஒப்படைக்கப் பட்டுள்ளது. (ச-5)

### தனியார் வர்த்தக...

அங்கத்தவர்களின் எண்ணிக்கையையும் உறுதிப்படுத்த வேண்டும்.தனியார் கடை உரிமையாளர்கள் கொள் வனவாளர்களின் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பொருட்களை சீராக பங்கீடு செய்ய வேண்டுமென யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார்.

வழங்கப்படும் பொருட்களில் ஒரு கிலோ அரிசி 42 ரூபாவுக்கும் ஒருகிலோ சீனி 72 ரூபாவுக்கும் ஒருகிலோ மா 43 ரூபாவுக்கும் ஒரு கிலோ பருப்பு 74 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டுமென கூறினார். பல நோக்கு கூட்டுறவு சங்க சகல விலைகளும் தனியார் கடைகளின் விலையும் சமமாக விருக்குமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை பால்மா உட்பட ஏனைய பொருட்கள் கப்பலில் எடுத்துவரப்படுவதானல் அப் பொருட்களும் தனியார் கடைகள் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார். (ச-5)

### இலங்கையின் எதிர்காலம்...

உயிரைக் குடித்த வான் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

அவர் மேலும் கூறியதாவது; அந்தப் பிரதேசத்தில் உள்ள போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவினரிடமும் அனைத்துலக அமைப்புக்களிடமும் அந்தச் சம்பவம் குறித்து விளக்கியுள்ளோம்.படையினர் பொதுமக்களைக் கொல்வதை நிறுத்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நாங்கள் எதிர் பார்க்கின்றோம். அரசாங்கம் நெருப்புடன் விளையாடுகிறது. இத்தகைய தாக்குதல்களை மக்கள் அமைதியை விடபோரைப் பற்றியே அதிகம் பேசுகின்றனர். இந்த ஆண்டில் எதனை எதிர் பார்ப்பது என்று எங்களுக்குத் தெரியும் என்றார்.

எனினும் கடந்த செவ்வாய்க்கிழமை பொதுமக்கள் மீது குறிவைத்துத் தாக்குதல் நடத்தியதை அரசு தரப்பு மறுத்துள்ளது.

விடுதலைப்புலிகள் எங்களது அமைதியைச் சோதிக்கிறார்கள் அவர்களே தொடங்கிய போரில் படையினரை இழந்துள்ளனர். என்று இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களால் வேறு வழியில்லாமல் இராணுவத் தீர்வுக்கு நாங்கள் தள்ளப் பட்டுள்ளோம். நிலைமை மோசமானால் நாங்கள் முழுப் போரில் இறங்கத்தயாராக உள்ளோம் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எனினும் புத்தாண்டில் அமைதியை நிலை நாட்டுவதில் நாங்கள் இன்னமும் நிலைப்பாடு கொண்டுள்ளோம். ஆனால் பயங்கரவாதத்தை ஒழிப்பது எங்களது கடமை என்றார் அவர். (எ-1)

### போர் நிறுத்த...

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; பயணிகள் பஸ்ஸில் இடம்பெற்றுள்ள குண்டு வெடிப்புக்கள் அதிகரித்து வரும் கிளைமோர்த் தாக்குதல் சம்பவங்கள் மற்றும் இலுப்பைக் கடவையில் இடம் பெற்ற விமானத்தாக்குதல்கள் ஆகியவற்றை மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கடந்த 5ஆம் திகதி குண்டு வெடிப்பில் சிக்கிய பேரூந்தினை கண்காணிப்பாளர்கள் பார்வையிட்டனர். மருத்துவமனைக்கும் சென்றனர் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அதிகரித்து வரும் கிளைமோர்த் தாக்குதல்கள் குறித்து தமது அறிக்கையில் கவலை தெரிவித்த கண்காணிப்புக்குழு கிளைமோர்த் தாக்குதல்கள் இலக்குகளுக்கு மட்டுமன்றி பொதுமக்களுக்கும் தீவிர அச்சுறுத்தலாக இருந்து வருகிறது எனவும் தெரிவித்துள்ளனர்.

போர் நிறுத்த ஒப்பந்தம் இன்னமும் அமுலில் இருக்கிறது என தாம் சம்பந்தப்பட்டவர்களுக்கு நினைவூட்டுவதாகவும் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துக்களின் அடிப்படையில் அனைத்து ஆயுத நடவடிக்கைகளை நிறுத்துமாறும் கோரியிருக்கின்றோம் என்றும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

### இனப்பிரச்சினைக்கான...

திகள் தெரிவிக்கின்றன.

இன நெருக்கடிக்குத் தீர்வைக் காணப்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்த நிபுணர் குழுவில் உள்ள பெரும்பான்மை உறுப்பினர்கள் சமர்ப்பித்த 'ஏ' அறிக்கையில் இன நெருக்கடிக்குத் தீர்வு அதிகாரப் பரவலாக்கல் உள்ளிட்ட சில வரவேற்கத்தக்க விடயங்கள் இருப்பதால் அதற்கு சிறுபான்மை சமூகத்தவர்களிடமிருந்து ஓரளவு வரவேற்பு தெரிவிக்கப்பட்டதுடன் ,கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களும் அதற்கு ஆதரவான கருத்துக்களை வெளியிட்டிருந்தனர்.

கடந்த வருடம் டிசம்பர் 18ஆம் திகதி இடம் பெற்ற சர்வகட்சி பிரதிநிதிகள் குழு அமைச்சர் திஸ்ஸ விதாரணவுக்கு நிபுணர் குழுவில் அங்கம் வகிப்பவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 4 வகையான அறிக்கை மற்றும் இதுவரை நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் விவாதித்த முக்கிய விடயங்களையும் மையமாக வைத்து புதியதோர் அறிக்கையை தயாரிக்க அனுமதி வழங்கியிருந்தது.

இதன்படி திஸ்ஸ விதாரண தயாரித்த அறிக்கை இன்று மாலை உலக வர்த்தக மையத்தில் நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டுப் பிரதிநிதிகள் மத்தியில் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்படவிருப்பதாக தெரிவிக்கப் பட்டது. (ச-5)

### கவிஞர்...

தெரிவித்துள்ளனர்.

தாயகத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளால் திருகோணமலையை வசிப்பிடமாகக் கொண்ட இவர் திருகோணமலையில் இடம் பெற்ற அடாவடித்தனங்களிற்கு எதிராக குரல் கொடுத்து முழு முனைப்புடன் எதிர்ப்புக்களையும் வெளிப்படுத்தியவர்.

அவரது குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பத்துடன் சு.வில்வரத்தினம் அவர்களின் தமிழ்த் தேசி யபற்றை கௌரவிக்கும் முகமாக நாட்டுப் பற்றாளர் கௌரவிப்பை வழங்கியுள்ளோம். என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

### இந்திய...

இந்திய வெளிவிவகார அமைச்சரின் இந்த விஜயத்தின்போது பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் ஏற்பட்ட தொடர் குண்டு வெடிப்புக்களையடுத்தே அவர் இலங்கைக்கு ஒருநாள் விஜயம் மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் இனப்பிரச்சி னைகுறித்த இந்தியாவின் நிலைப்பாடுகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் சமாதான முனைப்புகள் தொடர்பான கருத்துக்களும் இதன் போது பரிமாறப்படலாம் எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அந்த நாட்டின் எதிர்க்கட்சியினரை அண்மையில் சந்தித்து இலங்கைப் பிரச்சினை குறித்து கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. (ச-3)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.01.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.